A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 14 / 2021**

செயலாளர்,
சேலம் ATC நகர் நலச் சங்கம்,
C 73, ஏ.டி.சி. நகர்,
அழகாபுரம் புதூர் (அஞ்சல்),
சேலம் – 636 016. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு.M. நடராசன்,
திரு. R. மோகன்தாஸ், வழக்கறிஞர்)

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காமராஜ் நகர் காலனி,
உடையாப்பட்டி, சேலம்–14. . . . எதிர்மனுதாரர்

(திருமதி.N. குணவர்த்தினி, செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்,
திரு.K.சங்கர், உதவி மின்பொறியாளர்/இ.கா/கோரிமேடு)

**மனு பெறப்பட்ட நாள்: 29.01.2021**

**கேட்புரை நாள்: 11–03–2021**

**ஆணை நாள் : 28–07–2021**

29.01.2021 அன்று பெறப்பட்ட செயலாளர், சேலம் ATC நகர் நலச் சங்கம், C 73, ஏ.டி.சி. நகர், அழகாபுரம் புதூர் (அஞ்சல்), சேலம் – 636 016 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 14/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.03.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும்

இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் சர்வே எண் **91/3–**ல் உள்ள காலி இடத்தில் கட்டுமான பணிக்காக தற்காலிக மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் சர்வே எண் **91/3–**ல் உள்ள காலி இடத்தில் கட்டுமான பணிக்காக தற்காலிக மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர்/இ&ப/கோரிமேடு அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்படி இடமானது அண்ணா போக்குவரத்துக்கழக தொழிலாளர் கூட்டுறவு வீட்டமைப்புக்கு சொந்தமானது என தெரிய வந்ததால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தினை பரிசீலிக்க இயலாது என்று உதவி பொறியாளர்/இ&ப/கோரிமேடு அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3 எனவே தனது இடத்திற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சேலம் மின்பகிர்மான வட்டத்தை **18.08.2020** அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சேலம் மின்பகிர்மான வட்டம் **30.11.2020** அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு –**

சேலம் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **30.11.2020** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் தரப்பு மற்றும் வாரிய தரப்பு வாதங்களை ஆய்வு செய்து இம்மன்றத்தில் கீழ்கண்டவாறு தீர்வு வழங்கப்படுகிறது.*

*மனுதாரர் தரப்பில் கோரிமேடு பிரிவு அலுவலகத்தில் சேலம் ஏ.டி.சி நகர் நலச்சங்கம் சார்பாக தற்காலிக கூட்ட அரங்கம் கட்டுவதற்கு மின்சார இணைப்பு வேண்டி முதலில் **12.2.2019–**ல் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. பின்னர் அதற்கு ஆட்சேபனை கடிதம் பெறப்பட்டதனால் அதற்கு சட்டக் கருத்துரை பெறப்பட்டு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் **28.7.2020–**ல் online மூலம் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு வாரியத்தரப்பில் இருந்து **6.8.2020** மற்றும் **22.9.2020** ஆகிய தேதிகளில் விண்ணப்பத்துடன் கட்டிட நிறைவு சான்று அளிக்குமாறு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால் **24.9.2020** அன்று விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போதைய மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதி தலைமை பொறியாளார்/ வணிகம் அவர்களின் Lr.No.CE/ Comml/ SE/ EE3/ AEE2 /F.Plg. per/ FLM/ CM/222/2020 dated 27.10.2020 -ன் படி வணிக வீதப்பட்டி விண்ணப்பத்திற்கு மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட கட்டிட நிறைவு சான்று இணைக்கப்பட வேண்டும் என்ற விதிமுறை உள்ளதனால் மேற்கண்ட இடத்திற்கு விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும்பட்சத்தில் அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் தங்களது கோரிக்கை மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.”*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக **11.03.2021** அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு. M. நடராசன் மற்றும் திரு. R. மோகன்தாஸ், வழக்கறிஞர் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திருமதி. N. குணவர்த்தினி, செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம் மற்றும் திரு. K.சங்கர், உதவி மின்பொறியாளர்/இ.கா/கோரிமேடு, சேலம் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மேல்முறையீட்டாளர் சமுதாயக் கூடத்திற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டியும், அதே சர்வே எண் உள்ள இடத்திலேயே ஒரு கிணறும் ஒரு மேல்நிலை தண்ணீர் தொட்டியும், ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளது என்றும், அதற்கு ஒரு கிணற்று மோட்டார் (மின் இணைப்பு S.C. எண்.180) பெற்று கடந்த 32 வருடங்களாக உபயோகித்து வருவதாகவும் அந்த மின் இணைப்புக்கு ஆகும் மின்சாரக் கட்டணமும் இதுவரை அவரின் தொகையில் இருந்து தான் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

5.2 தங்களது A.T.C. நகரானது மொத்த பரப்பளவு 13.18 ஏக்கர் நிலம் கொண்டது என்றும் இந்த மொத்த பரப்பளவு நிலமும், அதனுடன் 179 வீடுகளின் கட்டுமான செலவுகள், சேர்த்து ஒவ்வொரு உறுப்பினர்களின் பங்காக செலுத்தப்பட்டது என்றும் நிலம் வாங்கப்பட்ட மொத்த தொகை மற்றும், ஒவ்வொரு வீட்டு உரிமையாளரின் வீட்டிற்கான தொகை இவைகள் அனைத்தும் 179 வீட்டின் உரிமையாளர்களே ஆவார்கள் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்கண்ட நிலம் வாங்கும்போது தாங்கள் ஒரு சங்கம் அண்ணா போக்குவரத்து கழக பணியாளர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கி அதை முறைப்படி பதிவு செய்து, நிர்வகித்து வந்ததாகவும், அதன் பிறகு தாங்கள் அனைவரும் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதினால் தற்போது தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள தங்களுக்காக ஒரு சங்கம் "சேலம் A.T.C நகர் நலச் சங்கம் – 45/2015" என்று ஏற்படுத்தி அதையும் முறைப்படி பதிவு செய்ததாகவும், தங்களது தேவைகளை தங்களின் நலச் சங்கம் மூலமாக நிறைவேற்றி கொள்வதாகவும், மேல்முறையீட்டாளரின் நகர் பகுதிக்குட்பட்ட பொது ஒதுக்கீடு நிலங்கள் அனைத்தும் இன்று வரை அவர்களின் பயன்பாட்டில்தான் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 கடந்த 20–2–2021 ம் தேதியன்று சேலம் உடையாப்பட்டி மின் பகிர்மான அலுவலக கிழக்கு கோட்டம் செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் கிடைக்கப் பெற்று அதில் 2019 ம் ஆண்டில் மேல்முறையீட்டளாரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதையே திரும்ப திரும்ப அறிவுறுத்தியதாகவும், தங்களுக்கு மின் இணைப்பு தரக்கூடாது என்ற எண்ணத்துடன் இருக்கும் செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தைப் பெற்று மிகுந்த வேதனையடைதததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்கண்ட சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கு சொந்தமானது என்றும், அடுத்தவர்கள் நிலம் கிடையாது என்றும், தாங்கள் 179 வீட்டு உரிமையாளர்களும், பணம் போட்டு வாங்கப்பட்டது என்றும், இதற்குண்டான ஆவணங்கள் அனைத்தும் சேலம் மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் சமர்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 செயலாளர், சேலம் A.T.C நகர் நலச் சங்கம், சேலம் அவர்களிடமிருந்து ச.எண்91/3 ல் உள்ள காலி இடத்தில் கட்டுமான பணிக்காக தற்காலிக மின் இணைப்பு வழங்க கோரி உதவி பொறியாளர்/இயக்கமும் பராமரிப்பும்/கோரிமேடு அவர்களால் 12.2.2019 அன்று விண்ணப்பம் பெறப்பட்டது. மேற்படி விண்ணப்பத்தோடு இணைக்கப்பட்ட பத்திர நகல் படி மேற்படி இடமானது அண்ணா போக்குவரத்துக்கழக தொழிலாளர் கூட்டுறவு வீட்டமைப்புக்குச் சொந்தமானது என தெரிய வந்ததால், மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலிக்க இயலாது என்று உதவி பொறியாளர் /இயக்கமும் பராமரிப்பும்/ கோரிமேடு அவர்களால் தெரிவிக்கப்ட்டுள்ளது. இதற்கிடையில் மேற்படி மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று செயலாளர், அண்ணா போக்குவரத்துக்கழகம் (சேலம் கோட்டம்–1) பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட், அவர்களிடமிருந்து ஆட்சேபனை கடிதம் பெறப்பட்டது. மேலும், மேற்கண்ட மின் இணைப்பு வழங்க கோரியது குறித்து அரசு வழக்கறிஞர், சேலம் அவர்களிடம் சட்ட கருத்துரை கோரப்பட்டதையடுத்து, புல எண்.91/3 ல் தற்காலிக மின் இணைப்பு வழங்க கூடாது என சட்ட கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கிராம நிர்வாக அலுவலர், 54, அழகாபுரம் புதூர், சேலம் மேற்குவட்டம், சேலம்–16 அவர்களால், உண்மைக்கு புறம்பாக தன்னிடம் மின் இணைப்பு பெற சான்று வாங்கியதாகவும், வழங்கிய சான்றினை ரத்து செய்வதாகவும் 18.3.2019 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (சேலம் கோட்டம்–1) பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட், 192, A.T.C சேலம்–636016 அவர்களால், மேற்படி மின் இணைப்பு கோரிய ச.எண்.91/3–இல் உள்ள இடமானது 1985 ஆம் ஆண்டு சேலம் அண்ணா போக்குவரத்துக் கழகம் பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அவர்களால் சேலம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தானம் மூலம் வழங்கப்பட்டது எனவும், இந்த இடமானது பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்றும் மற்றும் நலக்கூடம் கட்டிக்கொள்ள ஒ.மு.எண்–4865/93/அ 6, நாள் 8.12.93 இன் கடிதம் வாயிலாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்திற்கு தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 செயலாளர், A.T.C நகர் நலச்சங்கம், சேலம் அவர்கள் பெயரில் வீதப்பட்டி V–ல் மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம் இணையதளம் வழியாக 28–7–2020 அன்று பதிவு செய்வதற்கு முன்பாகவே தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உத்தரவுகள்

1. Memo No.CE/Comml/SE/EE3/AEE2/F.Plg.per/D.73/2020 dt. 14-5-2020
2. Memo No. CE/Comml/SE/EE3/AEE2/F.Plg.per/D.139/2020 dt. 4.7.2020.

ஆகிய கடிதங்களின் வாயிலாக மாநகராட்சியிடம் இருந்து கட்டிட வரைபட அனுமதி மற்றும் கட்டிட நிறைவு சான்று இணைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்படி Lr.No.CE/Comml/SE/EE3/AEE2/F.Plg.per/FLM/CM/333/2020 dated 27/10/2020 தேதியிட்ட கடிதத்தின் பார்வையில் 14.5.2020 மற்றும் 4.7.2020 தேதியிட்ட கடிதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மின் இணைப்பு வேண்டிய கட்டிடத்திற்கான கட்டிட வரைப்பட அனுமதி நகல், கட்டிட பணி நிறைவு சான்றிதழ் மற்றும் மேற்படி பெயரில் மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்று ஆகியவற்றை ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களிடம் பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலேயே தமிழ்நாட மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதி முறைகளின்படி மேற்படி விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

7.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரார் ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் தங்களது A.T.C. நகரானது மொத்த பரப்பளவு 13.18 ஏக்கர் நிலம் கொண்டது என்றும், இந்த மொத்த பரப்பளவு நிலமும், அதனுடன் 179 வீடுகளின் கட்டுமான செலவுகள், சேர்த்து ஒவ்வொரு உறுப்பினர்களின் பங்காக செலுத்தப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட நிலம் வாங்கும்போது அண்ணா போக்குவரத்து கழக பணியாளர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை உருவாக்கி அதை முறைப்படி பதிவு செய்து நிர்வகித்து வந்ததாகவும், தற்போது தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள தங்களுக்காக ஒரு சங்கம் "சேலம் A.T.C நகர் நலச் சங்கம் – 45/2015" என்று ஏற்படுத்தி அதையும் முறைப்படி பதிவு செய்ததாகவும், தங்களது நகர் பகுதிக்குட்பட்ட பொது ஒதுக்கீடு நிலங்கள் அனைத்தும் இன்று வரை அவர்களின் பயன்பாட்டில்தான் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரரின் வாதத்தில், செயலாளர், சேலம் A.T.C நகர் நலச் சங்கம், சேலம் அவர்களிடமிருந்து ச.எண்91/3 இல் உள்ள காலி இடத்தில் கட்டுமான பணிக்காக தற்காலிக மின் இணைப்பு வழங்கக் கோரி உதவி பொறியாளர்/இயக்கமும் பராமரிப்பும்/கோரிமேடு அவர்களால் 12.2.2019 அன்று விண்ணப்பம் பெறப்பட்டதாகவும், விண்ணப்பத்தோடு இணைக்கப்பட்ட பத்திர நகல் படி மேற்படி இடமானது அண்ணா போக்குவரத்துக்கழக தொழிலாளர் கூட்டுறவு வீட்டமைப்புக்கு சொந்தமானது என தெரிய வந்ததால், விண்ணப்பத்தினை பரிசீலிக்க இயலாது என்று உதவி பொறியாளர் /இயக்கமும் பராமரிப்பும்/ கோரிமேடு அவர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (சேலம் கோட்டம்–1) பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட் அவர்களால், மேற்படி மின் இணைப்பு கோரிய ச.எண்.91/3 ல் உள்ள இடமானது 1985 ஆம் ஆண்டு சேலம் அண்ணா போக்குவரத்துக் கழகம் பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அவர்களால் சேலம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தானம் மூலம் வழங்கப்பட்டது எனவும், இந்த இடமானது பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்றும் மற்றும் நலக்கூடம் கட்டிக்கொள்ள ஒ.மு.எண்–4865/93/அ6, நாள் 8.12.93 ன் கடிதம் வாயிலாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்துள்ளார். மேலும், CE/Comml அவர்களின் 14.5.2020, 4.7.2020 மற்றும் 27/10/2020

தேதியிட்ட கடிதங்களின்படி மேற்படி மின் இணைப்பு வேண்டிய கட்டிடத்திற்கான கட்டிட வரைப்பட அனுமதி நகல், கட்டிட பணி நிறைவு சான்றிதழ் ஆகியவற்றோடு மேற்படி பெயரில் மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்றை ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களிடம் பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலேயே மேற்படி விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.5** பத்தி **7.4–**ல் குறிப்பிடப்படும் CE/Comml அவர்களின் **14.5.2020, 4.7.2020** மற்றும் 27.10.2020 தேதியிட்ட கடிதங்களின்படி மேற்படி மின் இணைப்பு வேண்டிய கட்டிடத்திற்கான கட்டிட வரைப்பட அனுமதி நகல், கட்டிட பணி நிறைவு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் வழங்குவது சம்பந்தமாக **WP No. 15344 of 2020** –ல் வழங்கிய நீதிமன்ற ஆணையின்படி CE/Comml அவர்களால் **16.04.2021** கடிதத்தின்படி தற்பொழுது சில தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்றை ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களிடம் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமா என்பது குறித்துதான் தற்பொழுது முடிவு செய்யவேண்டும்.

**7.6** கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி மின்னிணைப்பு கோரும் இடமானது சேலம் சூரமங்களம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.**1722/1985–**ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின்படி மின் இணைப்பு கோரிய ச.எண்.**91/3** ல் உள்ள இடமானது சேலம் அண்ணா போக்குவரத்துக் கழகம் பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அவர்களால் சேலம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தானம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மின்னிணைப்பு கோரியுள்ள இடம் சேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானது என்பதால் இதுசம்பந்தமாக மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி **27 (12)** –ஐ ஆராய விரும்புகிறேன். மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி **27 (12)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *" 27. Requisitions for Supply of Energy:*
>
> *xxx xxx xx*
>
> *(12) Supply shall be given in Poromboke lands/Government lands on production of No Objection Certificate obtained from the concerned officer of the Government of Tamil Nadu. The applicant shall execute an indemnity bond in FORM-6 of the ANNEXURE III to this code and also pay security deposit twice the normal rate.*

7.7 மேற்கண்ட விதி **27(12)**ஐ கூர்ந்து படிக்கும்பொழுது புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்று மறுப்பின்மைச் சான்றிதழை

அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும், விண்ணப்பதாரர் இவ்விதியின் பின்னிணைப்பு III –ல் உள்ள படிவம் – 6 –ன் படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகையை செலுத்த வேண்டும் என்று அறியமுடிகிறது.

7.8 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் இடம் சேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானது என்பதால் மேல்முறையீட்டாளர் அவரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் உரிய சான்றாவனங்களும், சேலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மை சான்று (No Objection Certificate) ஆகியவற்றை சமர்ப்பித்தால் மட்டுமே மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை பரிசீலிக்க முடியும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

7.9 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் அவரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் மற்றும் உரிய சான்றாவனங்களுடன் சேலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மை சான்று (No Objection Certificate) சமர்ப்பித்தால் மட்டுமே அவருக்கு புதிய மின்னிணைப்பு வழங்கமுடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் அவரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் மற்றும் உரிய சான்றாவனங்களுடன் சேலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மை சான்று (No Objection Certificate) சமர்ப்பித்தால் மட்டுமே அவருக்கு புதிய மின்னிணைப்பு வழங்கமுடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 14/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. செயலாளர், **– By RPAD**
சேலம் ATC நகர் நலச் சங்கம்,
C 73, ஏ.டி.சி. நகர்,
அழகாபுரம் புதூர் (அஞ்சல்),
சேலம் – 636 016.

2. செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காமராஜ் நகர் காலனி,
உடையாப்பட்டி, சேலம்–14.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி அஞ்சல்,
சேலம்– 636 014.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.